**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : ST.C. 206/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 05.08.2024**

| | |
|---|---|
| **Name : கலையரசன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 present. ) (Accused 2, 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரம் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். நான் பெங்களூரில் வேலை செய்வதால் இரவு நேரத்தில் எங்கள் ஊருக்கு வந்து கொண்டிருந்தபோது கடந்த 01.08.2023ம் தேதி இரவு 10.30 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது கதவு மற்றும் ஜன்னலை திறந்தபோது, ஜன்னலில் உயர் மின் அழுத்த கம்பியை கட்டியிருந்ததால் மின்சாரம் தாக்கி எனது வலது கை மற்றும் வலது காலில் கட்டில் பட்டு மற்றும் மின்சாரம் தாக்கி எனக்கு உபாதை ஏற்பட்டது.

2. எனது கை ஒரு மாதத்திற்கு மேல் சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது வீட்டின் பின்புறம் உள்ள ராஜா என்பவர் எனது வீட்டை ஓட்டினார் போல் மின்சார கம்பிகளை கட்டியிருந்தார். இதனை நான் மறுநாள் காலையில் தான் இவ்வாறு மின்சார ஒயர் பொருத்தியிருந்ததை நான் பார்த்தேன். வீட்டில் உள்ள எனது பெற்றோரை கேட்டபோது எதிரி எந்த த கவலும் இல்லாமல் இந்த வேலை செய்ததாக தெரிந்து கொண்டேன்.

3. பிறகு ராஜா என்பவரிடம் கேட்டபோது ராஜா மற்றும் உத்தமன், ராஜாவின் மனைவி என்னிடம் மின்சார வாரியத்திற்கு பணம் செலுத்தி ஒயரை கட்டி

உள்ளதாக சொன்னார்கள். பிறகு கேவலமாக தேவடியா பையா என்று சொல்லி கெட்டவார்த்தையால் பேசினார்கள். பிறகு மறுநாள் 02.08.2023ம் தேதி காலை 06.30 மணிக்கு ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றபோது இரண்டு நாட்கள் கழித்து ஜலகண்டாபுரம் காவல் துறையினர் நான் சொன்ன விவரத்தை எழுத்திக்கொணடார்கள்.

4. நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். என்னை திட்டும்போது ஏன் திட்டுகிறீர்கள் என்று கேட்டபோது நீ உயிரோடுதான் உள்ளாய் என்று கேவலமாக பேசினார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

5. எனது வீடு எதிரியின் வீடுக்கு பின்புறத்தில் உள்ளது என்றால் ஆமாம். எங்கள் வீட்டிற்கும் எதிரியின் வீட்டிற்கும் எவ்வளவு இடைவெளி உள்ளது என்றால் சுமார் 5 –6 அடி அகலமுள்ள வீதி உள்ளது. எனது வீடு உள்ளபகுதியும் எதிரி வீடுள்ள பகுதியும் வேறு வேறு வீதியில் உள்ளது என்றால் ஆமாம்.

6. எனது வீட்டின் சுவற்றின் படும்படி ஒயரை கட்டியுள்ளார்கள் என்றால் ஆமாம். எனது உடம்பில் ஒயர் பட்டவுடன் இரவு நேரத்தில் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. மறுநாள் காலையில் எத்தனை மணிக்கு தகவல் கொடுத்தேன் என்றால் சுமார் 06.00 மணிக்கு கொடுத்தேன்.

7. நான் காவல் நிலையத்தில் எழுத்து மூலமான புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். எனது புகாரின் மீது போலிசார் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எதிரியை அழைத்து விசாரித்தார்கள் ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை.

8. என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்று சேர்த்தார்கள் என்றால் லிங்கேஸ்வரன் என்பவர் அழைத்து சென்றார். மருத்துவமனைக்கு சேர்ந்தபிறகு எத்தனை நாட்கள் கழித்து போலிசார் விசாரித்தார்கள் என்றால் 2 நாட்கள்

கழித்து விசாரித்தார்கள். அங்கு வந்த காவல் துறையினர் எழுதிக்கொண்டார்களா என்றால் ஆமாம். அதில் நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள் என்றால் ஆமாம்.

9. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் ஆமாம். எனது வாக்குமூலத்தில் எனது வீட்டின் சுவற்றில் படும்படி நான்குமின் ஒயர்களை ஒட்டுக்காக இணைத்து PVC ல் சேர்த்து கட்டியிருப்பதாக உள்ளதா என்றால் உள்ளது. 3ம் எதிரி சம்பவ இடத்திற்கு எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் முதலாம் எதிரி அ வரது வீட்டின் மாடியிலிருந்து என்னை திட்டிக்கொண்டிருந்தபோது வந்துவிட்டார்.

10. 1ம் எதிரியின் வீடும் 3ம் எதிரியின் வீடும் தனித்தனியாக உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னை போலிசார் மறுபடியும் விசாரித்தார்களா என்றால் 7.08.2023ம் தேதி என்னை விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்தின் போது யார் யார் அங்கிருந்தார்கள் என்றால் அதை நான் கவனிக்கவில்லை.

11. நான் சொன்ன சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 2–3 நிமிடம் நடைபெற்றது. 1, 2ம் எதிரியும் அ வரது வீட்டின் மாடியிலிருந்துதான் பேசினார்கள், கீழே வந்து பேசவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி எனது வீட்டிற்கு அருகில் இடம் வாங்கி வீடு கட்டியதிலிருந்து எனக்கும் அவருக்கும் பிரச்சனை இருந்து வந்துள்ளது என்றால் சரிதான்.

12. அதை மனதில் வைத்துக்கொண்டு எதிரியின் மீது பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 முதல் 3ம் எதிரிகள் நான் சொல்வதுபோல் திட்டவில்லை என்றாலும் 3ம் எதிரி சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும் சரியல்ல. உண்மையாகவே மின்சாரம் தாக்கியிருந்தால் என் உடலில் காயங்கள் அதிகம் ஏற்பட்டிருக்கும் என்றும், அதுபோல் நடக்காததால் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : ST.C. 206/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 05.08.2024**

| Name : லிங்கேஸ்வரன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 1 present. ) (Accused 2, 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கட்டநாய்க்கன்பட்டியில் குடியிருந்து நெசவு வேலை செய்கிறேன். அ.சா1 எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். எனது தம்பி சேலத்தில் உள்ள ஜவுளிசம்மந்தமாக வேலை செய்து வருகிறார். சம்பவ சமயத்தில் எனது தம்பி பெங்களூர் பகுதியில் வேலை செய்வதால் இரவு நேரத்தில் எங்கள் ஊருக்கு வந்து கொண்டிருந்தார். கடந்த 08.08.2023ம் தேதி எனது தம்பி இரவு 10.30 மணியளவில் வீட்டிற்கு வந்தபோது தூங்கிக்கொண்டிருந்தார். அப்போது தூங்குவதற்கு முன்பாக கதவு மற்றும் ஜன்னலை திறந்தபோது, ஜன்னலில் உயர் நான்கு மின் அழுத்த கம்பியை கட்டியிருந்ததார்கள். எனது தம்பி ஜன்னலை திறந்தபோது மின்சாரம் தாக்கி அவருக்கு வலது கை மற்றும் வலது காலில் மின்சாரம் தாக்கி காயம் ஏற்பட்டது.

2. மறுநாள் காலை நான் மற்றும் எனது தம்பி எதிரிகளிடம் கேட்டபோது நாங்கள் மின்சார துறையினரிடம் சொல்லிவிட்டுதான் கம்பியை கட்டியதாக சொன்னார்கள்.

3. பிறகு எதிரிகள் எனது தம்பியை கெட்டவார்த்தையால் பேசினார்கள். பிறகு உடனடியாக எனது தம்பியை அழைத்துச்சென்று ஜலகண்டாபுரம் அரசு

மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம். எதிரிகள் இருவரும் எங்கள் வீட்டின் பின்புறத்தில் உள்ளவர்கள் என்பதால் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மாலை 06.00 மணிக்கு என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் . தற்போது சொல்லியதுபோல்தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் தனியாக கட்டிநாய்க்கன் பட்டியில் குடியிருந்து வருகிறேன்.

5. போலிசார் விசாரணையில் 6 வது வார்டு மேட்டுத்தெருவில் குடியிருப்பதாக சொல்லியிருக்கிறேனா என்றால இல்லை. எனக்கு தகவல் கிடைத்து காலை 06.00 மணி சுமாருக்கு எனது தம்பி வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் சரிதான். நானும் எனது தம்பியை அழைத்துக்கொண்டு எதிரி வீட்டிற்கு சென்றேன். 1ம் எதிரி ராஜா எங்கிருந்து திட்டினார் என்றால் அவரது வீட்டின் மாடியிலிருந்து திட்டினார். இந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

6. 3ம் எதிரி சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. போலிசாருக்கு தகவல் சொல்லி போலிசார் அப்போது சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் ஆமாம். எனது தம்பி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தாரா என்றால் வீட்டிலிருந்து நேரடியாக எனது தம்பியை நான் மருத்துவமனைக்–கு அழைத்து சென்றுவிட்டேன். அங்கு வந்துதான் போலிசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

7. எங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததால் நாங்கள் குடியிருக்கும் வீட்டை விலைக்கு கேட்டு வந்ததால் அதனை மனதில் வைத்துக்கொண்டு பொய்யாக புகார் அளித்தோம் என்றால் சரியல்ல. சந்தோஷ்குமார், வெங்கடாசலம் ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்தார்கள்

என்றால் சரிதான். அவர்களை எப்போது விசாரித்தார்கள் என்றால் என்னை விசாரித்தபோது அவர்களையும் விசாரித்தார்கள். 1 முதல் 3ம் எதிரிகள் நான் சொல்வதுபோல் திட்டவில்லை என்றாலும் 3ம் எதிரி சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும் சரியல்ல. உண்மையாகவே மின்சாரம் தாக்கியிருந்தால் எனது தம்பியின் உடலில் காயங்கள் அதிகம் ஏற்பட்டிருக்கும் என்றும், அதுபோல் நடக்காததால் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : ST.C. 206/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 05.08.2024**

| Name : வெங்கடாசலம் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 1 present. ) (Accused 2, 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் இந்திரா நகரில் குடியிருந்து நெசவு வேலை செய்கிறேன். அ.சா1 எனது நண்பர் ஆவார். கடந்த 01.08.2023ம் தேதி அ.சா1 அவர்களுக்கு மின்சாரம் தாக்கி ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக சொன்னார்கள். அ.சா1 பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். மின்சார ஒயர்களை ஜன்னலில் கட்டியிருந்தபோது இரவு நேரத்தில் ஜன்னலை நீக்கும்போது மின்சாரம் தாக்கியதாக தகவல் தெரிந்து கொண்டேன். மறுநாள் காலை 08.00 சுமாருக்கு சென்றபோது எதிரி மின்சார துறையினருக்கு தகவல் தெரிவித்துவிட்டுதான் அவ்வாறு கட்டியதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் 8 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல்தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். யார் யாரை திட்டினார்கள் என்பது நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். போலிசார் என்னை

விசாரிக்கும்போது வேறு யாரை விசாரித்தார்கள் என்றால் சந்தோஷ் மற்றும் லிங்கேஷ் ஆகியோரை விசாரித்தார்கள். நான் நண்பர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : ST.C. 206/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 05.08.2024**

| | |
|---|---|
| **Name : சந்தோஷ்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 present. ) (Accused 2, 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகணடாபுரத்தில் குடியிருந்து நெசவு வேலை செய்கிறேன். அ.சா1 எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் ஆவார். கடந்த 01.08.2023ம் தேதி அ.சா1 அவர்கள் வேலையிலிருந்து வந்தபோது இரவு நேரத்தில் மின்சாரம் தாக்கியதாக பக்கத்தில் உள்ளவர்கள் சொன்னார்கள். பிறகு அ.சா1 ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக சொன்னார்கள். மின்சார ஒயர்களை ஜன்னலில் கட்டியிருந்தபோது இரவு நேரத்தில் ஜன்னலை நீக்கும்போது மின்சாரம் தாக்கியதாக தகவல் தெரிந்து கொண்டேன்.

2. கடந்த 08.08.2023ம் தேதியன்று சம்பவ இடத்தில் ஜலகண்டாபுரம் காவல் துறையினர் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைந்த வரைபடத்தில் நான் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3. போலிசார் எங்கு வைத்து கையொப்பம் பெற்றார்கள் என்றால் வீட்டிற்கு வெளியே கோவில் வைத்து கையொப்பம் பெற்றார்கள். நான் மட்டுமே கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. கையொப்பம் செய்தநேரம் மாலை 06.00 இருக்கும் எனறால் சரிதான். மகசரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மின்சாரம் தாக்கியதற்கு நான் சாட்சியாக இருக்க கேட்டதால் நான் கையொப்ப்ம செய்தேன். அதில் உள்ள விவரங்களை போலிசார் என்னிடம் படித்து காட்டினார்களா என்றால் ஆமாம். நான் நண்பர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.